காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir
விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 27 வியாழக்கிழமை 14.10.2021 கதிர் 343

## இது ரகசியம் அல்ல!

'மயிலே, மயிலே இறகு போடு' என்றால் மயில் இறகு போடாது. பல சமயங்களில் பிடுங்கி எடுக்க வேண்டியிருக்கின்றது. மீனவர் பிரச்சினையில் கூட அப்படித்தான் போலும்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் ☞2

# மேலும் 31 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 31 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் ☞10

# பச்சை வலயத்துக்குள் நுழைந்தது இலங்கை

## பொறுப்புடன் செயற்படாவிட்டால் மீண்டும் அபாயம் என்கின்றார் அன்வர் ஹம்தானி



இலங்கை சிவப்பு வலயத்திலிருந்து பச்சை வலயத்துக்கு முன்னேறியுள்ளது எனச் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் நாயகம் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் ☞10

# நேற்று தொற்று 679

இலங்கையில் நேற்று 679 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் ☞10

## கூட்டமைப்பின் ஆர்ப்பாட்ட அழைப்பையடுத்து

# கைது படலம் மீள ஆரம்பம்

## நேற்று 23 இந்திய மீனவர்களைப் பிடித்தது கடற்படை



(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் 23 பேர் கடற்படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரு படகுகளில் வந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான மீனவர்கள் படகுகளுடன் காங்கேசன் துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். ☞10

# சுப்ரமணியம் சுவாமி கோட்டாவுடன் பேச்சு



பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்ரமணியம் சுவாமியுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் ☞10

# வடக்கு வன்முறை சம்பவங்களுக்கு வேலைவாய்ப்பின்மையே காரணம்



(இ.கலையமுதன்)

வடக்கு மாகாண இளையோருக்கு வேலையில்லாப் பிரச்சினை காரணமாகவே வன்முறைச் சம்பவங்களும் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து காணப்படுகின்றன என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தன்னிடம் ☞10

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் சம்பவம்;

# கரன்னாகொட மீதான குற்றப்பத்திரம் நீக்கம்



தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்ட சம்பவத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட மீதான குற்றப் பத்திரத்தை நீக்கிக்கொள்வதாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரமே இவ்வாறு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ☞10

# போராட்டத்தைத் தொடர ஆசிரியர்கள் தீர்மானம்



உறுதியான தீர்வு கிடைக்கும் வரை கற்பித்தல் புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்று தீர்மானித்துள்ளது. ☞10

# ஆள முடியாவிடின் போய்விடுங்கள்!



ஆளமுடியாவிட்டால் – விலைவாசியை கட்டுப்படுத்த முடியாவிட்டால் – மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாவிட்டால் போய் விடுங்கள். ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவ்விடயத்தைக் கொழும்பு சரிவரக் கையாளவில்லை, சொதப்புகின்றது என்ற எண்ணப்பாடு வடக்கு, கிழக்குத் தமிழ் மீனவர்கள் மத்தியில் உண்டு.

இலங்கைக் கடல் பிரதேசங்களுக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்கள் ட்ரோலர்களைப் பயன்படுத்துதல், அவை மூலம் கடல்படுக்கையின் அடி வரை முழு கடல் வளத்தையும் துளாவி அள்ளும் இழுவை மடி வலையைப் பயன்படுத்துதல், அதனால் இலங்கை மீனவர்கள் விரித்த வலைகளை நாசப்படுத்துதல் போன்றவையே இலங்கை மீனவர்களை – குறிப்பாக வடக்கு, கிழக்கு மீனவர்களை – பெரிதும் பாதிக்கின்றன என எமது மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ட்ரோலர் மீன்பிடிக்கும், இழுவை மடிப் பாவனைக்கும் இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பு எம்.பியான சுமந்திரனின் முழு முயற்சியில் நல்லாட்சி அரசின் காலத்தில் இந்த இரண்டுக்கும் தடை விதிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனை மீறி இந்த ரக மீன்பிடியில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைக்கும் அந்தச் சட்டம் வழி செய்தது.

சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அதனை இலங்கை அதிகார வர்க்கம் சரிவரப் பயன்படுத்தவே இல்லை என்றும் –

அதுதான் தமிழக மீனவர்களின் அத்துமீறலுக்குப் பிரதான காரணம் என்றும் –

சுமந்திரன் எம்.பி. சில தினங்களுக்கு முன்னர் வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருந்தார்.

"தமிழக மீனவர் அத்துமீறலைத் தடுப்பதற்கு உரிய சட்டம் எனும் சரியான ஆயுதத்தை நாங்கள் வழங்கியிருக்கின்றோம். ஆனால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த சட்டம் என்ற அந்த ஆயுதத்தை சரிவரப் பயன்படுத்துகின்றார் இல்லை. இந்தப் பிரச்சினையை அவர் சட்ட ரீதியாகக் கையாளப் பின்னடிக்கின்றார். தமக்குத் தெரிந்த ஒரே மார்க்கத்தை அவர் பயன்படுத்த விழைகின்றாரோ என்று எமக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. வடக்கு, கிழக்குத் தமிழ் மீனவர்களை நேரடியாகத் தமிழக மீனவர்களுடன் முரண்பட்டு, முட்டி மோதுவதற்கு அவர் வழிப்படுத்துகின்றாரோ, தூண்டி விடுகின்றாரோ என்ற சந்தேகம் எமக்கு உண்டு. சட்டத்தைச் சரிவரப் பிரயோகித்தாலே – ட்ரோலர் மற்றும் இழுவை மடி வலைகளைப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்தாலே – இந்த அத்துமீறல் – மீனவர்களின் எல்லை மீறல் – அடியோடு குறைந்து விடும். வடக்குக் கிழக்குக் கடற்பிரதேசத்தின் கடல் வளம் தக்க வைக்கப்படும்" – என்றெல்லாம் சுமந்திரன் விடயங்களை அடுக்குகின்றார்.

அவை உண்மையா, பொய்யா என்பது வேறு விடயம். ஆனால் அக்கருத்தில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியுள்ளன.

ஒன்று – இலங்கையில் தடை செய்யப்பட்ட ட்ரோலர் படகு மீன்பிடி அமைச்சர் டக்ளஸின் யாழ்.மாவட்டத்திலேயே – இலங்கை மீனவர்களாலேயே – தாராளமாக முன்னெடுக்கப்படுகின்றது. இப்படித் தடையை மீறி மீன்பிடிக்க ட்ரோலர்கள் பயன்படுத்தப்படுவதைக் கண்டும் காணாமலும் இருப்பதற்கு சில தரப்புகள் ட்ரோலருக்கு இவ்வளவு என்று கப்பம் அறவிடுகின்றன எனவும் தகவல்.

இப்படி உரிய சட்டத்தை இலங்கை நடைமுறைப்படுத்தாமைதான் பிரச்சினைக்குப் பிரதான காரணம் என்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்திய சுமந்திரன் வரும் 17, 18ஆம் திகதிகளில் இதனையும் விவசாயிகள் பிரச்சினையையும் முன்னிறுத்தி பொதுஜனப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இந்தப் போராட்டத்தில் கிளிநொச்சி விவசாயிகள் மற்றும் மீனவர்களைக் களத்தில் இறக்கும் ஏற்பாட்டை சிவஞானம் சிறிதரன் எம்.பி. செய்கின்றார் எனத் தெரிகின்றது.

சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாமைக்கு எதிராக மக்கள் எழுச்சிப் போராட்டம் என்று அறிவித்ததும், இலங்கையில் சட்டத்தை நடைமுறையாக்கும் பாதுகாப்புத் தரப்பு உடனடியாகவே களத்தில் இறங்கியது.

பருத்தித்துறைக் கடற்பரப்புக்கு நுழைந்தவர்கள் என்று கருதப்படும் 23 இந்திய மீனவர்கள் இரண்டு ட்ரோலர்களுடன் அப்படியே அள்ளப்பட்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் முஸ்தீபுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த ஆறு, ஏழு மாதங்களாக அத்துமீறலில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஓர் இந்திய மீனவர் கூட கைது செய்யப்படவில்லை. கடைசியாக கடந்த மார்ச் 26ஆம் திகதி அத்துமீறலில் ஈடுபட்ட 54 இந்திய மீனவர்கள் நான்கு ட்லோலர்களுடன் மடக்கப்பட்டனர். ஆனால் அது இந்தியாவில் தேர்தல் சமயம் என்பது சுட்டிக்காட்டப்பட்டு, சில முயற்சிகள் அவசர அவரசமாக இங்கு மேற்கொள்ளப்பட்டமையை அடுத்து அவர்கள் அனைவரும் உடன் விடுவிக்கப்பட்டனர்.

அதற்குப் பின்னர் ஏழு மாதங்களாக எந்த மீனவரும் கைது செய்யப்படவேயில்லை. அதற்கு கொவிட் தொற்று ஒரு காரணம் என்று கூறி சமாளிக்கப்பட்டது.

மீனவர்கள் மட்டுமல்ல, தமிழகக் கடத்தல்காரர்கள் கூடக் கைது செய்யப்படவேயில்லை. சில தினங்களுக்கு முன்னர் மஞ்சள் மூடைகளுடன் மடக்கப்பட்ட நான்கு தமிழகக் கடத்தல்காரர்களை, கடத்தப்பட்ட பொருள்களைப் பறிமுதல் செய்து விட்டு விடுவித்தனர் இலங்கைக் கடற்படையினர்.

இருக்கும் சட்டங்களை அரசு சரிவரப் பிரயோகிக்கவில்லை. அதுதான் நெருக்கடிக்குக் காரணம் என்று குற்றம் சுமத்தி, அதற்கு எதிராக மக்கள் போராட்டம் என்று அரசியல்வாதிகள் அறை கூவியதும், அரச அதிகாரிகள் நித்திரை விட்டு எழுந்து – கனவு கலைந்து – அத்து மீறும் தமிழக மீனவர்களை மடக்கும் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றனர்.

'மயிலே, மயிலே இறகு போடு' என்றால் காரியம் நிகழாது என ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டமை ஏன் என்பது இப்போது வாசகர்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

★ ★ ★

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் – 20ஆம் திகதி – இந்தியா வருகின்றார் என்றும், இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்திப்பு அப்போது நிகழும் என்றும், இந்தியாவின் பிரபல செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் குஷி நகர் உள்ளது. கௌதம புத்தர் தமது எண்பதாவது வயதில் பரிநிர்வாணம் அடைந்தது இங்குதான் என்கின்றது சரித்திரம். அதனால் பௌத்தர்களைப் பொறுத்த வரை குஷி நகரம் பிரசித்தி பெற்ற புனித யாத்திரைத் தலம்.

அங்கு புதிய விமான நிலையம் ஒன்றை வரும் 20ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைக்க விருக்கின்றார்.

இந்தப் புனிதத் திருத்தல யாத்திரை மையத்தில் புதிய விமான நிலையம் திறக்கின்றமை பௌத்த மக்களுக்கு முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்வில் இலங்கையிலிருந்து 125 புத்த பிக்குகள் மற்றும் இருபது பேர் அடங்கிய இலங்கைக் குழுவுடன் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பங்கு பற்றுவார் என முதலில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்தப் புதிய விமான நிலையத்தில் முதல் உள்ளூர் விமானமாக டெல்லியிலிருந்து பிரதமர் மோடி வரும் விமானம் தரையிறங்கும் என்றும் –

அதை அடுத்து அன்றைய தினம் அங்கு சர்வதேச விமான சேவையாக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயணிக்கும் விமானம் தரையிறங்கும் என்றும் –

அந்தச் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

குஷி நகரில் இரு தலைவர்களும் விமான நிலையத் திறப்பு நிகழ்வுக்குப் பின்னர் சந்தித்துப் பேசுவர் என்றும் –

அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் நரேந்திர மோடி உரையாற்றுவார் என்றும் –

அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தகவல் வெளியிட்டது.

இந்தச் செய்தி இன்னும் கொழும்புத் தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை.

இரு தலைவர்களும் சந்தித்தால் பிரயோசனமாக ஏதும் நடக்க வாய்ப்புண்டு. பார்த்திருப்போம்.

– மின்னல் –

லாண்ட்மாஸ்டர் விற்பனைக்கு
ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட K8 - NITIA model லாண்ட்மாஸ்டர் Cobota latest version, Not registered with rota -weeler விற்பனைக்கு உண்டு.
விலை 400,000/=
நேரடியாகப் பார்வையிட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0767403814

வேலைவாய்ப்பு
கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல வியாபார நிலையத்திற்கு மொத்த விற்பனையாளர்களும், இவ் நிறுவனத்திற்கு தகைமையுள்ள முகாமையாளரும் விரும்பத்தக்கது.
i) விற்பனையாளர்
1. 5 வருட முன் அனுபவம் உள்ளவர்.
2. கிளிநொச்சி வதிவிடம் உள்ளவர்.
3. கணனி செயலாற்றல் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
4. வயது எல்லை 28 45 வருடங்கள்
ii) முகாமையாளர்
1. A/L Qualification கட்டாயம்
2. 10 வருட தொழில் முன் அனுபவம்
3. கணனி செயல்முறைத்திட்டம் கட்டாயம் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
4. வயதுஎல்லை 35 - 45 வருடங்கள்
தொடர்புகள் 0717354308




அமெரிக்க லொத்தர் வீசா DV-2023
அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
அமெரிக்க லொத்தர் வீசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.
முடிவுத்திகதி - 09.11.2021
குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.
தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
076 4431 576
இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.
இல.09, அருள் ஜ°வல்லறி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# அரசமைப்பு உருவாக்க ஜனாதிபதி நியமித்த நிபுணர்கள் குழுவினரின் நிலைமை என்ன?

## சம்பந்தன் கேள்வி



புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனிடம் ஜனாதிபதியின் வாக்குறுதிகள் தொடர்பில் வினவியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

சகல மக்களினதும் உரிமைகளையும் உள்வாங்கிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு.

அதுவும் இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எனினும் இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் இதற்கான எந்த முயற்சிகளையும் அக்கறையுடன் - இதய சுத்தியுடன் - முன்னெடுக்கவில்லை.

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக ஆராயஜனாதிபதிநிபுணர்குழுவொன்றை நியமித்தார். அந்த நிபுணர்குழு நியமிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் இதன் முன்னேற்றகரமான நகர்வுகள் என்ன?

இப்போது எந்த கட்டத்தில் இந்த முயற்சிகள் உள்ள தென்ற எதுவும் நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரியாது. எமக்கும் இது தொடர்பான அறிவிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

சகல கட்சிகளுடனும் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுகளை முன்னெடுத்து சகல தரப்பின் கருத்துகளையும் பதிவு செய்துள்ளனர்.

நாமும் எமது கருத்துகளை அங்கு பதிவு செய்துள்ளோம். எனினும் முன்னேற்றகரமான நகர்வுகள் எவையும் இடம்பெறவில்லை.

இந்த நாட்டில் முப்பது ஆண்டுகால யுத்தம் நடைபெற்றுள்ளது. நீண்ட காலமாக நாட்டில் அமைதியின்மை நிலைமையே காணப்பட்டது.

இந்த சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்னவென்றால், தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தாமை, மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஆட்சியாளர்கள் நினைக்காதமையேயாகும்.

தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையில் அவர்கள் ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில், அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில், தமது ஜனநாயக உரிமைகளுக்கு முறையான அங்கீகாரம் இருக்க வேண்டும் என்றநிலைப்பாட்டில்செயற்படுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் சகல உரிமைகளும் நாடு முழுவதும் பயன்படுத்தக்கூடிய வகையில் இருக்க வேண்டும். அவ்வாறு அமைய வேண்டும் என்றால் தமிழ் மக்களின் உரிமைகளையும் அங்கீகரித்து அமுல்படுத்தப்பட்ட அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டால் தான் சாத்தியப்படும்.

ஆகவே நாட்டில் முறையான அரசியல் சாசனம் உருவாகினால் மட்டுமே, அபிவிருத்தியும், முன்னேற்றமும் நாட்டில் அமைதியும் ஏற்படும்.

எனவே எந்தவித தாமதமும் இல்லாது சகல மக்களின் உரிமைகளையும் உள்ளடக்கிய புதிய அரசியல் சாசனம் விரைவாக உருவாக்கப்படவேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டு நிற்கின்றது.

அதேபோல்மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தச் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அண்மைக்காலமாக சர்வதேச பிரதிநிதிகளை நாம் சந்தித்த சகல சந்தர்ப்பங்களிலும் புதிய அரசமைப்பு உருவாக்கம் போன்ற காரணிகளை வலியுறுத்தியுள்ளோம்.

அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்ற காரணிகளை சர்வதேசதரப்பினருக்கு நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். - என்றார்.

தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையில் அவர்கள் ஆட்சி அதிகாரங்களை பயன்படுத்திக்கொள்கின்ற வகையிலும், அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், தமிழ் பேசும் மக்களின் சகல உரிமைகளையும் நாடு முழுவதும் பயன்படுத்தக் கூடிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகள் அனைத்துக்கும் நிரந்தரமான தீர்வு - அதுவும் பக்குவமான தீர்வு -கிடைக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.

மக்களுக்கு உறுதியளித்ததன் பிரகாரம் அடுத்த ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு மற்றும் தேர்தல் முறைமை உருவாக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவில் தெரிவித்திருந்தார்.

## கப்ராலுக்கு எதிரான வழக்கு விசாரணையை ஏற்பதா? இல்லையா? நவம்பர் 3 இறுதிமுடிவு!

### மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு

முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட முடிவை செல்லுபடியற்றது என அறிவிக்கக் கோரியும் அவரைக் கைது செய்து விசாரணை செய்ய பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டளை நீதிப்பேராணை மனுவை விசாரணைக்கு ஏற்பதா இல்லையா என எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி தீர்மானத்தை அறிவிப்பதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

மேற்படி மனு நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) மேன் முறையீட்டு நீதிமன்றின் சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தது.

இதன்போதே நீதிமன்றம் இதனை அறிவித்தது.

நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜராகிய அனைத்துத் தரப்புக்களினதும் சட்டத்தரணிகள் மனு தொடர்பிலான எழுத்து மூல சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளனர் என மன்றுக்கு அறிவித்தனர். அதனையடுத்தே நீதிமன்றம் மேற்படி விடயத்தை அறிவித்தது.

முன்னதாக முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ராலை மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு நியமிப்பதை தடுக்க கோரி கடந்த செப்ரெம்பர் 14 ஆம் திகதி தெற்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் மேன்முறையீட்டு நீதிமன்றில் கட்டளை நீதிபேராணை மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள விதந்துரைகளை மையப்படுத்தி அஜித் நிவார்ட் கப்ராலை கைது செய்து தடுத்து வைத்து வாக்குமூலம் பதிவு செய்யுமாறும் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் சட்டமாதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை பிறப்பிக்க வேண்டும் என அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

சட்டமாதிபர், பொலிஸ்மா அதிபர், அஜித் நிவார்ட் கப்ரால் , ஜனாதிபதி செயலாளர் கலாநிதி பி. பி. ஜயசுந்தர, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டி.எம். ஜே.வை, பி.பெர்னான்டோ ஆகியோர் இம்மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லையென பழிவாங்கப்பட்ட மட்டு மாநகரசபை ஊழியர்கள்?

### முதல்வர் சரவணபவனிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு மாநகரசபையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துக்கொள்ளவில்லை என்பதற்காகத் தம்மை பழிவாங்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதாக மாநகரசபையின் ஊழியர்கள் மாநகரசபையின் முதல்வரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபையில் கடந்த செவ்வாய்க் கிழமை வாயில் கதவை மூடி சிலர் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் மேற்படி போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதற்காக சுகாதார ஊழியர்கள் சிலரை மாநகர ஆணையாளர் அச்சுறுத்தினார் எனவும், வேலை வழங்க முடியாதென விரட்டி னார் எனவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன்போது ஊழியர்களுடன் மாநகரசபை முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளமையுடன், வேலைத்தளத்துக்குப் பொறுப்பாகவிருந்தவரும் அழைக்கப்பட்டு மாநகர முதல்வரால் எச்சரிக்கப்பட்டமையுடன், ஊழியர்களை பழிவாங்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் மாநகரசபையின் ஆணையாளரால் எழுத்துமூலமான அறிவுறுத்தல்கள் கிடைக்காமல் எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டாம் எனவும், இதன்போது ஊழியர் பொறுப்பு மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஊழியர்களின் பிரச்சினைக்கான தீர்வை வழங்கித் தமது பணிகளை முன்னெடுக்குமாறும் முதல்வர் பணிப்புரை விடுத்தமையைத் தொடர்ந்து ஊழியர்கள் மீண்டும் கடமைக்கு சென்றனர்.

## களுத்துறையில் பெண் மர்மமான முறையில் சாவு

களுத்துறை, தொட்டங்கொட பகுதியில் உள்ள வீடொன்றில் பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடவட்டகொட, தொடங்கொடவில் வசிக்கும் 54 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண், வட்டிக்கு பணம் கொடுப்பவர் என்று தகவல் கிடைத்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், மேற்படி பெண் தனியாக வீட்டில் வசித்து வருகிறார் எனவும், தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலத்தை அடையாளம் கண்டதாகவும் பொலிஸார் கூறினர்.

தலையில் காயத்துடன் இரத்தம் வழிந்ததால், படுகொலை என்ற சந்தேகத்தின்பேரில்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

களுத்துறை பிரதேச குற்றப் புலனாய்வு அதிகாரிகள் இன்று பிற்பகல் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நீதிவான் விசாரணைகளை நடத்தவும் திட்டமிட்டிருந்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீளும் மீனவர் பிரச்சினை

**மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாத ஒரு விவகாரமாக இழுபடுகின்றது. இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் அதுவும் இழுபடுகின்றது. அதுபோலவே இந்தப் பிரச்சினையும் சம்பந்தப்பட்ட தரப்புகளினால் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுவதாகவே தோன்றுகின்றது.**

**இது ஒரு சமூகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினை. இந்திய மீனவரோ, இலங்கை மீனவரோ யார் என்றாலும் தங்களின் உயிரைப் பணயம் வைத்துத் தம் மக்களுக்காக – தங்கள் குடும்பத்துக்காக – தமது தேசத்துக்காக – மேற்கொள்ளும் ஓர் ஆபத்தான தொழில் இது.**

**“அலைகடல் மீதே அவனின் வாழ்க்கை யாருக்குத் தெரிகிறது...? யாருக்குப் புரிகின்றது...? ஆண்டவன் தானே அவனின் துணைவன்... யாருக்குப் புரிகின்றது?” – சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துப் பாடகரான ரமேஷ் வைகுந்தநாதன் பாடிய மெல்லிசைப் பாடலின் அடிகள் இவை.**

**அந்த மீனவனின் வாழ்வின் ஆபத்தும் பாதிப்பும் இந்த நவீன உலகில் கூட யாரும் புரிந்து கொண்டுள்ளனரா என்பது தெரியவில்லை.**

**இலங்கை – தமிழக மீனவர் பிரச்சினையில் கூட அவர்கள் பல தரப்பினரினதும் கைப்பிள்ளைகளாகி அவலப்படுகின்றமை கண்கூடு.**

**இந்தச் சமயத்தில் விவசாயிகள், மீனவர்கள் பிரச்சினைக்கு நீதி கோரி வரும் 17, 18ஆம் திகதிகளில் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறைக்குக் கடல் வழியாக வந்து போராட்டம் நடத்துவதற்கும் உத்தேசமாம். நல்லது. நடக்கட்டும்.**

**இதேசமயம், கொழும்புக்கு வந்திருக்கும் – இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த – மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியம் சுவாமி கூட இலங்கைக் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இப்பிரச்சினை குறித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.**

**தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பிராந்தியத்துக்குள் எல்லை மீறி நுழைந்து தொழில் செய்கின்றார்கள், அவர்கள் ட்ரோலர்களைப் பயன்படுத்தி, கடலின் அடிப்படுக்கை வரை கடல் வளத்தை வாரி அள்ளும் இழுவை மடி வலைகளைப் பயன்படுத்துகின்றனர், இதனால் இலங்கையின் வடக்குக் கடலோர மீன்வளமே துடைத்து அழிக்கப்படுகின்றது, இலங்கை மீனவர்களின் வலைகள் அறுத்தெறியப்படுகின்றன – என்றெல்லாம் இலங்கை மீனவர்கள் கதறுகின்றனர்.**

**ஆனால், நாம் முன்னைய பாட்டில் சுட்டிக்காட்டியபடி அவனின் – மீனவனின் – வாழ்க்கையும் நெருக்கடியும் யாருக்குப் புரிகின்றது? யாருக்குத் தெரிகின்றது?**

**ட்ரோலர் மீன் பிடிக்கும், இழுவைமடி வலைப் பயன்பாட்டுக்கும் எதிரான சட்ட விதிகள் இலங்கைச் சட்டத்தில் உள்ளன. அந்த விதிமுறைகள் இலங்கைத் தரப்பினர் இந்திய மீனவருக்கு எதிராகவும் பயன்படுத்துவதில்லை. இலங்கை மீனவருக்கு எதிராகவும் பயன்படுத்துவதில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. அதுவே இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாமைக்குப் பிரதான காரணம் என்கின்றன சில தரப்புகள்.**

**சட்டத்தில் ட்ரோலர் பாவனைக்குத் தடை என்றாலும் இங்கு தாராளமாக – தங்கு தடையின்றி – கடலில் அவை வலம் வருகின்றன என்றால் குறை எங்குள்ளது? இந்தியத் தரப்பிலா? இந்திய மீனவர் தரப்பிலா? இலங்கைத் தரப்பிலா? இலங்கை மீனவர் தரப்பிலா?**

**இனிமேலும் காலம் தாமதிக்கப்படாமல் இது வெளிப்படையாகப் பேசி தீர்க்கப்பட வேண்டிய விவகாரமாகி விட்டது. தரப்புகள் அதற்குத் தயாரா?**

# மாகாணசபை முறைமை தமிழருக்கு தீர்வாகாது!

## சிவாஜிலிங்கம் கருத்து



மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டாலும் அதனைத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின்படி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு இருக்கின்றபோதும் அதனை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துமா என்ற கேள்வி எழுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் தேர்தலை நடாத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல் அதற்குப் பதிலாக மாகாண சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டினார்.

எனவே இந்திய – பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதே சமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கும் இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு வடக்கு – கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டார்.

அதேநேரம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நிறைவேற்றிய பின்னரே மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண் டும் என ரெலோ வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக மட்டு. ஆயர், சாணக்கியன் சந்திப்பு



மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட் தந்தை அதிவண.ஜோசப் பொன்னையா ஆண்டகையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் சந்தித்து பேசினார்.

ஆயர் இல்லத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது 69 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய ஆயர் பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகைக்கு, இரா.சாணக்கியன் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் சில பல விடயங்கள் தொடர்பிலும் இரா.சாணக்கியன் இதன்போது தெளிவுபடுத்தியிருந்தார்.

குறிப்பாக விவசாயிகளின் பசளை பிரச்சினை, காணி அபகரிப்பு, சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் மண் அகழ்வு போன்ற விடயங்களை ஜனாதிபதி, பிரதமர் போன்றோருக்கு எமது பொதுமக்கள் சார்பாகத் தெரியப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை இரா.சாணக்கியன் முன்வைத்திருந்தார்.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதல் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் பற்றியும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இரா.சாணக்கியனின் கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருகிறேன் எனவும் விரைவாக தெரியப்படுத்துகிறேன் எனவும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேர ருட்தந்தை அதிவண.ஜோசப் பொன்னையா ஆண்டகை குறிப்பிட்டார்.

# எரிபொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டி வருமாம்!

## அமைச்சர் கம்மன்பில கூறுகிறார்



நிதி அமைச்சால் நிவாரணம் வழுங்கப்படாவிட்டால் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 15 ரூபாவாகவும் ஒரு லீற்றர் டீசலின் விலையை 25 ரூபாவாகவும் அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை முன்வைத்துள்ளதாகக் கூறினார்.

இந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ள அமைச்சர் உதய கம்மன்பில இறுதி முடிவு இன்னும் எட்டப்பட வில்லை என்றும் குறிப்பிட்டார்.



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)



பாபாவுடன் கருஜயசூரியா தம்பதியர்

**இறைவனை ஏனங்கு தேடுகிறீர்கள்! ஏனிங்கு தேடுகிறீர்கள்!**
**அவன் நின்னுள்ளத்தில் உறையும்போது! சேவை செய்யுங்கள்! இறையன்பு உங்களைத் தானே தேடிவரும்!**

பகவானின் இப்பொன்மொழியில் திளைத்த சாயி அன்பர்கள், முன்னாள் சபாநாயர் கரு ஜயசூரியாவின் துணைவியார் மருத்துவர் வசந்தா ஜயசூரியா கூறும் சாயி அனுபவங்களில் திளைத்துப் போகிறார்கள். இதோ:-

'1970இல் தந்தையார் காலமானதும், எமது குடும்பம் துரதிஷ்ட நிலைமையை முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. மருத்துவக் கல்லூரியில் மாணவியாக இருந்தமையால் நான் கம்பஹாவில் எமது உறவினரான திருமதி ஜெயவர்த்தனாவின் வீட்டில் அறையொன்றில் வாடகை கொடுத்து தங்கியிருந்தேன். அவர் தனியறையில் அனைத்து கடவுளர்களின் படங்களையும் வைத்து வழிபட்டார். அதிகாலை நான்குமணிக்கு எழுந்து தேங்காய் எண்ணை விளக்கேற்றி வழிபாட்டில் ஈடுபடுவார். அவர் பக்திகண்டு மகிழ்ந்தபோதும், அவ்வழிபாட்டில் பங்குபற்றியது இல்லை. ஆனால் அவர் சுகவீனம் உற்றால் நானும் என் தோழியும் அவரது சுவாமியறையைச் சுத்தம்செய்வோம்.

அவர் தனது சுவாமியறையில் பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா படத்தையும் வைத்து வழிபட்டார். ஏழ்மையில் உழன்ற தமக்கு பகவான் உணவும், உடையும்தரும் 'அன்னவஸ்திரதாய' என்று ஏத்திஏத்தித் தொழுதார்.

வியாழன்தோறும் பகவான் பாபா படத்துக்கு விளக்கேற்றி, மாலையணிந்து வழிபடுவார். டாக்டர் பிள்ளை என்பார் கொழும்பில் நடாத்திய சாயி நிலையம் சென்று பஜனைகளில் பங்குபற்றுவார். அவ்வேளைகளில் தனக்கு உதவியாகஎம்மையும்வருமாறுஅழைப்பார். பெற்றதாய் போன்று அன்பு செய்து எம்மை அரவணைத்தமையால் அவர் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் வியாழன்தோறும் அவருடன் சாயி பஜன் சென்றோம்.

ஒருநாளிரவு அமரரான பிரபல ஆயுர்வேத வைத்தியரான என் தந்தையார் தன் வாழ்நாளில் பாபாவைக் கண்டு கேட்டறிந்தில்லாதவர், கனவில் தோன்றி சாயிபஜன் பாடி, பாபாபடத்துக்கு விளக்கேற்றினார். தீப்பெட்டியொன்றை என்னிடம் எறிந்தார். இப்போது பல்லாண்டுகளின் பின்னர் 'தமஸோமா ஜோதிர் கமய' என்னும் பஜனைப் பாடலின் பொருள் புரிகிறது. அதுமட்டுமல்ல அண்மையில் இருபௌத்த பூர்ணிமா வைபவங்களில் பகவான் பாபா தான் விளக்கேற்றிவிட்டு தீப்பெட்டியை என்னிடம் வீசி அதனைக் கணவரிடம் கொடுக்குமாறு சொன்னபோது, தந்தையார் கனவில் தோன்றியது ஞாபகம்வந்தது.

நான் கண்ட முக்கிய கனவொன்று. பாபாதோன்றி 'நீ திருமணஞ் செய்வதற்கு தருணம் வந்துவிட்டது. மணாளனை யான் அனுப்புவேன்.' என்றார். வாரமொன்று போயிருக்கும். தாயார் என்னை வார இறுதியில் கனவான் ஒருவரைச் சந்திக்க ஊருக்கு வருமாறு பணித்தார். இராணுவத்தில் இணைந்திருந்த, பதினொரு வருடங்களாக துணைவியொருவரைத் தேடிக்கொண்டிருந்த கருஜெயசூரியா என்னைப் பார்த்ததும் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்தார். இரண்டேயிரண்டு வாரங்களில் 1971 ஜூன்மாதம் 24ஆம்திகதி எமது திருமணம் நிறைவேறியது. என் வாழ்க்கையை பாபா வழிநடத்துகின்றார் என்பது புரிந்தது. அதனைத் தொடர்ந்து எமது வழிபாட்டறையில் புத்தபிரானின் சிலைக்கருகே பகவான் பாபாவின் படத்தை வைத்து, விளக்கேற்றி வழிபட்டு வருகிறோம்.



பகவான் படம்

1986 முதன்முதவாக புட்டபர்த்தி போனேன். தசரா கொண்டாட்ட காலமென்பதால் பக்தர் கூட்டம் அதிகமாக இருந்தது. அதிகாலை மூன்றுமணிக்குத் துயிலெழுந்து, நீராடி, மந்திரை பிரதட்சனம் செய்து, ஓம்காரம், சுப்பிரபாதம் நிகழ்வுகளில் பங்குபற்றினேன். முதுகெலும்பு பிரச்சினை இருந்தமையால் பூரணசந்திர மண்டபத்தில் நடந்த நிகழ்வுகளின் போது நிலத்தில் அமர்ந்திருப்பது கடினமாக இருந்தது. வியர்த்து இளைத்தேன். நோவுதாங்க முடியாமல் மேடையில் வெண்ணிற ஆடையணிந்து மேடையில் ஊஞ்சலாடி அமர்ந்திருந்த பாபாவிடம் கண்ணீர்விட்டு வேண்டுதல் செய்தேன். உடனே நோவு மறைந்தது.

நான் இதுவரை என்வாழ்நாளில் புட்டபர்த்தி போன்ற ஒழுங்குக் கட்டுப்பாடுமிக்க ஆச்சிரமத்தைக் கண்டதில்லை. கண்களுக்கு அழகானது. மனதுக்கு இதந்தருவது. சாந்திதருவது. பகவான் பாபாவின் அன்பெனும் நறுமணம் எங்கனும் பரவியின்பம் நல்கும்.

1989 நாட்டுக்கு ஆபத்தான காலம். எனது கணவர் கருஜெயசூரியா தனியார்மயமாக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். தீவிரவாதிகள் அதனை எதிர்த்தனர். ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு மிரட்டல் இருந்தது. சிலர் ஆணைக்குழுவிலிருந்து இராஜிநாமாச் செய்தனர். இணங்க மறுத்த சிலர் கொலைசெய்யப்பட்டனர். எனது கணவருக்கு உயிராபத்து இருந்தது. எமது இல்லம் தலைநகர் கொழும்பில் இருந்ததால் பாதுகாப்பு என்று நம்பினோம்.

எமது இல்ல காவலர்கள் இருவர். காலையில் கடமையாற்றும் காவலர் இரவு 7 மணிக்கு தனது கடமையை முடிக்க மற்றையவர் பொறுப்பேற்பார். ஒருநாளிரவு 7.30 மணியிருக்கும். இரவு ஒருவர் நேரக்காவலர் போலநடித்து, தோட்டக்காரரை வாயில் கதவைத் திறக்கப் பண்ணி வீட்டினுள் நுழைந்துவிட்டார். சற்றுநேரத்தில் அவரைச் சார்ந்த ஆயுதம் ஏந்திய ஒருகூட்டமும் வீட்டினுள் நுழைந்துவிட்டது. ஐந்துபேர் வெளியே நிற்க, எண்மர் பின்கதவால் நுழைந்தனர்.

நான் அறையினுள் பத்திரிகை வாசித்தவாறு இருக்க, மகள்மார் இருவரும் டார்ஸான் நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்தவாறு இருக்க, கணவர் பிறிதோரிடத்தில் முதியவரானதன் தாயாருடன் இருந்தார். இவர்களைக் கண்டதும், நிலைமை பாரதூரம் என்றுணர்ந்தேன். அவர்கள் இளைஞர்கள். பட்டதாரி மாணவர்கள்என்றுணர்ந்தேன். அவர்களிடம் 'என்ன வேண்டும்?' என்று கேட்டேன். 'எங்களுக்கு அவர் வேண்டும்.' என்றனர். 'நான்வருகிறேன்' என்றேன்.' 'இல்லை, நீங்கள் மருத்துவர். நீங்கள் வேண்டாம். உங்கள் கணவர்தான் வேண்டும். அவரை அழைத்துச் செல்லவேண்டும்.' என்றனர்.

அச்சமடைந்தநான்பகவான்பாபாவை மனதிலிருத்தி வேண்டுதல் செய்துவிட்டு, 'என்மூலம் பேசுங்கள' என்று பகவானை வேண்டிவிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினேன். வந்தவர்கள் இலக்கம் கூறித் தம்மை அழைத்துக் கொண்டனர். அருகில் இருந்த இளைஞனின் தோளில் கைவைத்து கூறினேன். 'சகோதரனே! என் கணவர் மக்களை நேசிப்பவர். இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கவே இவற்றைச் செய்கின்றோம்.'

என் கருத்துக்களைக் கேட்ட இளைஞன் மனமாற்றமடைந்து கூறினான்: 'நாங்கள் உங்கள் கூற்றை விசாரித்துவிட்டு, முடிவெடுப்போம். பின்னர் நாளை வருவோம். அதுவரை இச்சம்பவம் பற்றி யாருக்கும் கூறவேண்டாம்.' என்று கூறிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றனர்.

ஒரு தடவை புட்டபர்த்தி யாத்திரை சென்றிருந்தபோது, பகவான்பாபா நேர்காணலுக்கு என்னையும், என் கணவனையும் அழைத்து, கணவரிடம் ஒரு நெக்லஸைக் கொடுத்து, என் கழுத்தில் அணியுமாறு கூறினார். அவ்வாறு அவரணியும்போது, சுவாமி என்தலையில் தன்கை வைத்து ஏதோ மந்திரங்களைச் சொன்னார். அவர் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினோம். அது ஆன்மிகரீதியான மாங்கல்யம் என்று தெளிந்தோம்.



பாபா அருளிய அங்கி

எங்களுடைய திருமணத்தின் 25 ஆவது ஆண்டு பூர்த்தியன்று, 1997 பெப்ரவரி 4 ஆம் திகதியன்று கருணைமிக்க பகவான் பாபா என்னிடம் அங்கியொன்றினைத் தந்து கட்டளை பிறப்பித்தார்: 'இவ்வங்கி நும்நோயாளர்களுக்கு!'

பகவான் பாபாபற்றி நான்எழுதிய இருநூல்களை ஆசீர்வதிக்குமாறு பாபாவிடம் நேர்காணல் சென்றவேளை கோரினேன். 'தந்தை பாபாவுடன் நான்' என்றநூலைக் கொடுத்ததும், அதில் தன்திருக்கரத்தால் 'அன்புடன் பாபா' என்றெழுதினார். அடுத்து நான்எழுதிய இரண்டாவது கவிதைநூல் 'என்தாயாருக்கு வந்தனம்' என்பதை அவரிடம் கொடுத்ததும் 'அன்புடன் சத்திய சாயி' என்று ஆசீர்வதித்தார்.

சிவசக்தி சொருபன் அன்றோ எங்கள் பாபா!'



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 160

**அக்காலத்தை - எண்பதுகளின் கால கட்டத்தை - பற்றி ஆய்வு செய்யும் தற்காலத்து இளைஞர்கள், இந்த அட்டூழியங்கள் பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளார்கள் என அறிந்து அதனையும் வாசகர்களுக்குத் தரலாம் என கருதி சில கேள்விகளை முன்வைத்தேன். அவர்களின் பதில்களை அப்படியே தருகிறேன். இது அந்த இளைய சமுதாயத்தின் சொந்த கருத்துக் கள். அதில் எள்ளளவும் உந்துதல்கள் இல்லை. அவை வருமாறு:-**

**இந்தியாவின் ஆதிக்கம் சரியாக கணிக்கப் பட்டதா?**

இந்தியாவின் ஆதிக்கம் பிராந்திய அரசியலிலும் சரி உலக அரசியலிலும் பாதிப்பொன்றை ஏற்படுத்தும் வல்லமையுள்ளது. குறிப்பாக இலங்கைத்தமிழர் தொடர்பான பிரச்சினையில் சர்வதேச தீர்மானங்களில் இந்தியாவின் நிலைப்பாடும் கருத்தும் ஆழமாக பார்க்கப்படக் கூடியது. சர்வதேச அரசியலில் பலம் பொருந்திய நாடுகளின் செல்வாக்கினால் சில தனியரசுகள் உருவாகி இருக்கின்றன. ரஷ்யா - எரித்தியா முதல் இந்தியா - பங்களாதேஷ் வரை உதாரணப்படுத்தலாம். விடுதலைப் புலிகளின் ராஜீவ் காந்தி மீதான தாக்குதல் இந்தியாவுடனான உறவுக்கு கட்டப்பட்ட ஒரு சமாதியாகவே நான் பார்க்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் மேலாக ராஜீவ் காந்தியினால் அனுப்பப்பட்ட அமைதிப்படை ஆக்கிரமிப்புபடையாகி இலங்கையில் அட்டூழியங்களை புரிந்திருக்கலாம். பங்களாதேஷின் சுதந்திரம் கூட இந்திய இராணுவத்தின் பல அட்டூழியங்களின் பின்னர் நிகழ்ந்ததமை தான். தமிழ்மக்கள் வன்முறைகளை ஆண்டாண்டு காலமாக பார்த்திருக்கிறார்கள். கறுப்பு ஜீலை கலவரங்களுக்கு காரணமானவர்களை விடுதலைப் புலிகள் அழித்தார்களா? அழிக்க முடிந்ததா? யாழ் நூலக அழிப்பிற்கு காரணமானவர்களை பழிவாங்கினரா? அல்லது சத்துருக்கொண்டான் போன்ற படுகொலைகளுக்கு காரணமானவர்களை அழிக்க முடிந்ததா? இந்திய சமாதானப் படைகளின் செயல்களுக்கு பலம் பொருந்திய ஓர் நாட்டின் தலைமையை படுகொலை செய்வதானது அதுவும் எமது நேசகரமாக இருந்த தமிழ் நாட்டில் அந்த மக்கள் வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் உதறிச் செய்வதானது அதிக சேதாரத்தை எமது உரிமைப்போராட்டத்தில் உண்டு பண்ணும் என்பதை ஏன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை கரிசனை கொள்ளவில்லை என்பது தான் எனது வினா. நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் ஒரு பேச்சில் இந்திய இராணுவம் ஈழத்தில் பெண்களை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார்கள் என பகிர்ந்தார். எந்த மனிதருக்கும் இவ்வாறான மிலேச்சத்தனமான செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது. அது மனித இனத்திற்கே சாபம். அவற்றிற்கப்பால் எனது தெளிவற்றதன்மை சில சம்பவங்களை ஆய்வுக்குட்படுத்தும் போது தோன்றுகின்றது.

அதாவது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தென்னிலங்கையிலும் யாழிலும் விடுதலைப் புலிகளுக்காக இயங்கிவந்த சில பெண்களும் சந்தேகத்தின் பேரில் பல பெண்களும் காலவரையறை இன்றி தடுத்து வைத்திருந்தமையும் அவர்கள் அங்கு அனுபவித்த கொடுமைகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. இலங்கை உயர்நீதிமன்றால் விசாரணைக் குட்படுத்தப்பட்ட குமுதினி மற்றும் ஏனையோர்கள் எனும் அடிப்படை உரிமை மீறல் வழக்கினை வாசித்தால்



சீமான்

உடல் பதைபதைக்கும். அப்பெண் அனுபவித்தவை அத்தகையன. இது ஆயிரத்தில் ஒன்று. இவற்றிற்கெல்லாம் விடுதலைப் புலிகளின் தலைமையின் பதில் என்னவாக இருக்கும்? இச்சித்திரவதைகள் விடுதலைக்கான விலை என்பதா? அல்லது தற்கொலை படையில் இறக்கும் போது அது தியாகம் என்கிறார்களா? வலி, மானம், இரத்தம், சதை இவை மனிதருக்கு பொதுவானது. அது எந்த நோக்கத்திற்காகவும் சித்திரவதைகளை அனுபவிக்கப்படவோ அல்லது இழக்கப் படவோ கூடாது என்பது எனது கருத்து.

**அப்படியானால் அட்டூழியங்கள் பொறுமையற்ற முடிவுகளும் அதற்கான விலைகளுமா?**

சிங்களப் பேரினவாதிகளால் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகளுக்கு அமைதி காத்திருக்க வேண்டும் என்று கூறவில்லை. ஈழத்தமிழர்களுக்கு போராட்டம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். வன்முறையானது ஆயுதம் தாங்கிய படைகளுடன் மாத்திரமே இடம்பெற்றிருக்க வேண்டும். அத்தோடு அந்த போராட்டம் வன்முறையில் மாத்திரம் தங்கியிராமல் பேச்சுவார்த்தைகளிலும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். கத்தியின்றி இரத்தமின்றி ஒரு தீர்வு எட்டும்போது அதற்கு ஆதரவு அளித்திருக்க வேண்டும். எம் இளைஞர்களை உயிர்களை யுத்தகளத்திலிருந்து காப்பதற்கு வழி ஒன்று கிட்டும் போது அதற்கு முழுமையாக முயற்சித்திருக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அவ்வாறான ஒரு செயலானது விடுதலைப் புலிகளின் தலைமையிடத்தில் தோன்றியிருப்பின் அது நீலன்திருச்செல்வம் போன்ற பேச்சுவார்த்தை தூதுவர்களை பாதுகாத்திருக்கும். சர்வதேச மட்டத்தில் நல்லபிப்பிராயத்தை புலிகள் பெற்றிருப்பர் அது இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் ஒன்றை உருவாக்கியிருக்கும்.


அத்தோடு எமது போராட்டத்திற்கு சார்பாக பயன்படுத்திக்கொள்ள கூடிய பலம்பொருந்திய நாடு ஒன்றின் பகையினை சம்பாதித்துக்கொள்வது எவ்விதத்திலும் இலாபம் இல்லை என்பது வெளிப்படையானது. அமைதிப்படையினை கையாண்ட விதமும் சரி இறுதியில் ராஜீவ் காந்தியின் படுகொலையும் சரி தனிநாடு என்ற இலட்சியத்தின் ஒரு கதவை விடுதலைப் புலிகள் தாமே மூடிக்கொண்டனர் என்பதே எனது புரிதல்.

2009 இலும் அதற்கு முன்னரும் தமிழ் மக்களுக்கு இடம்பெற்ற அழிவுகளும் வன்முறைகளும் மனித குலத்திற்கே ஓர் சாபம். மனிதாபிமானத்திற்கே எதிரான செயல்கள். அவற்றிற்கான விலைகள் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இவ்விழப்புகளுக்கு வழியமைத்து கொடுத்ததில் விடுதலைப் புலிகளின் தலைமையின் பங்களிப்பும் அதிகம் உண்டு என்று நான் உணர்கிறேன். வன்முறை அனைத்திற்கும் தீர்வாகாது. நாம் வன்முறையை எதிர்கொண்டோம் எம்மினம் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் பொறுமையோடு நாம் அவற்றை கையாண்டிருக்கலாம். ஜீலியன்வலா படுகொலையின் பின்னர் காந்தி அவர்கள் அகிம்சையை துறந்து ஆயுதம் ஏந்தியிருக்கலாம். இந்திய காங்கிரஸிலிருந்து சுபாஸ் சந்திரபோஸ் வெளியேறி இந்திய இராணுவத்தை அமைத்த போது அவை அவரை பாதித்தபோதும் அவரது தலைமைத்துவத்தின் பொறுமை சுதந்திர இந்தியாவை மக்களுக்கு பரிசளித்தது.

**அதீத வன்முறை ஆயுதப் போராட்டத்தின் முடிவாக அமைந்ததா?**

பேராசிரியர் Costas Laoutides அவர்கள் மோதல் தொடர்பான ஆய்வு என்ற பாடத்தை எனக்கு கற்பிக்கும் போது மோதலுக்கான காரணங்களுள் ஒன்றாக எதிரிகளிடம் இருந்து தங்களை காத்துக் கொள்ள வன்முறையை பிரயோகிப்பது அவசியமாகின்றது என்று மோதல் உயிரியலின் அடிப்படை என்ற கொள்கையை விளக்கியிருந்தார். விடுதலைப் புலிகள் கூட இதனை பின்பற்றியிருக்கலாம். ஆனால் இக்கொள்கைகள் நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றவை. அப்போது இருந்த சமூக அரசியல் பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகள் வேறு. இப்போது பல மாற்றங்களை உள்வாங்கியிருக்கின்றன. இப்போது இக்கொள்கைகளை நாம் அவ்வாறாகவே ஏற்றுக்கொள்ள முடியாது. வன்முறைகள் உரிமையை பெற்றுக்கொள்ள சில சூழ்நிலைகளில் அவசியமாகின்றன ஆனால் அவை சில வழிமுறைகளையும் எல்லைகளையும் கொண்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை பின்பற்றி ஓர் உரிமைப்போராட்டம் நகரும்போது மாத்திரமே இலக்கு என்ற ஒரு விடயத்தை அடைய முடியும். அதற்காக உயிரை இழக்க வீரர்கள் உண்டு என்பதால் சட்ட வரம்புகளை மீறி சதிராடக்கூடாது என்பது எனது சிந்தனை. விடுதலைப் புலிகளின் தலைமையின் எல்லை மீறிய வன்முறையுடன் கூடிய அணுகுமுறை அவர்களினதும் ஆயிரக்கணக்கான போராளிகளினதும் அப்பாவி தமிழ்மக்களினதும் அழிவுக்கும் தமிழ் மக்கள் சந்தித்த மனித குலத்திற்கெதிரான அட்டூழியங்களுக்கும் சர்வதேசத்தின் மௌனத்திற்கும் காரணமாய் போயின என்பதே எனது புரிதல்.

(வளரும்....)



நீலன் திருச்செல்வம்

# அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்கு சாணக்கியன் பாவிக்கும் ஆயுதம் மண்!

## வியாழேந்திரன் சாட்டை




மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தலிலும் தங்களது இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பாவிக்கும் ஒரே ஆயுதம் மண் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டு ஊடக மையத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கடைசியாக இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மண் அனுமதிப்பத்திரம் தொடர்பில் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் கட்சிச் சார்ந்தவர்கள் அதற்கான விளக்கத்தை அளித்திருக்கின்றார்கள். அதேபோல் மாவட்ட அமைப்பாளர் சந்திரகாந்தன் சார்ந்தோரும் அதற்கான விளக்கத்தை அளித்திருக்கின்றார்கள் அந்த வகையில் எனது விளக்கத்தையும் நான் வழங்க வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றேன்.

சாணக்கியன் உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை உயரிய சபையான நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். என்னுடைய சகோதரர் சதாசிவம் மயூரனின் பெயரிலும் மண் அனுமதிப்பத்திரம் இருப்பதாக அவர் இதன்போது கூறியிருக்கின்றார். அதே வேளை இதன்போது பஸில் ராஜபக்ஷவை விழித்து அவர் இதனைப் பேசியிருக்கின்றார்.

இதனுடைய நோக்கம் என்ன உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை நாடாளுமன்றத்தில் பஸில் ராஜபக்ஷவை விழித்துக் கூறியமைக்கான நோக்கம் என்ன? என்று பார்த்தால் சண்முகநாதன் மயூரனுக்கும் சதாசிவம் மயூரனுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஒரு பொய்யான தகவலை வழங்கியிருக்கின்றமை என்பது இவருடைய எதிர்கால அரசியலுக்கு இது மிகவும் ஆபத்தாக முடியும். காரணம் மக்கள் இவர்களை நிராகரிப்பார்கள். ஏன் என்றால் உண்மைக்குப் புறம்பான செய்திகளை சொன்னவர்களைக் கடந்த காலங்களில் மக்கள் நிராகரித்து இருக்கின்றார்கள்.

இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லி ஓர் அரசியல் நடத்த வேண்டுமா? அதே போன்று பெருமாள் சந்திரகுமாரை பரமசிவம் சந்திரகுமார் ஆக்கியிருக்கின்றார்கள். இது ஓர் ஆரோக்கியமான அரசியலா? அதேவேளை நான் ஒரு பிழை விட்டால் நான் என்னை திருத்திக் கொள்வேன் பிழைகளை நியாயப்படுத்த நான் விரும்பமாட்டேன். எனது தம்பியின் பெயரில் மண் அனுமதிப்பத்திரம் இருந்தால் அதனை நான் கண்டிப்பேன்.

என்னுடைய வீட்டில் வுநோனி எனும் நாய்க்குட்டி இருக்கின்றது அதனுடைய பெயரிலும் கூட மண் பெமிற் இல்லை ஆனால் சில வேளை அதுவும் நாடாளுமன்றத்துக்கு வருமோ தெரியாது? அதற்கும் ஓர் அப்பாவின் பெயரை வைத்து பெமிற் இருப்பதாகக் கூறினாலும் கூறுவார்கள். ஏன் என்றால் அரசியலுக்காக ஆதாரமில்லாத கருத்தையே இவர்கள் கூறுவார்கள்.

இவர்களது பொய்யான கருத்துக்களை நாங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். வர இருக்கின்ற நாடாளுமன்ற அமர்வில் நான் அது தொடர்பான விளக்கத்தையளித்து அந்த விடயத்தை ஹன்சாட்டிலே இருந்து நீக்குமாறு சபாநாயகரைக் கோர இருக்கின்றேன்.

இவர்கள் எதிர்வரும் தேர்தலுக்காகவே மக்கள் மத்தியில் பிழையான செய்திகளைக் கூறி மக்கள் மத்தியில் தங்களது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

அவர் கூறிய இலக்கத்தைக் கொண்ட மண் பெர்மிட் இல் சண்முகநாதன் மயூரன் என்பவருக்கே மண் அனுமதிப்பத்திரம் இருக்கின்றது இதை புவிச்சரிதவியல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த மண் விடயம் தொடர்பில் நாங்கள் பல வேலைத்திட்டங்களை செய்து கொண்டே வருகின்றோம், சில இடங்களில் சில விடயங்களைத் தடுத்து இருக்கின்றோம். சில விடயங்களை கட்டுப்படுத்திக் கொண்டு வருகின்றோம். அதேவேளை புவிச்சரிதவியல் திணைக்களம் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பல விடயங்களை செய்துகொண்டுவருகின்றோம். தயவுசெய்து தங்களுடைய வங்குறோத்து அரசியலைத் தக்கவைப்பதற்காகவோ எங்களைத் தாக்குவதற்காகவோ இவ்வாறாக பொய்களைக் கூறாதீர்கள்.

நீங்களும் வாருங்கள் இந்த மாவட்டத்தில் சட்டவிரோத மண் அகழ்வை தடுப்பதற்காக பல திட்டங்களை வகுப்போம். உங்களது ஆலோசனையை சொல்லுங்கள் அவற்றையும் உள்வாங்குவோம். நடைமுறைப்படுத்துவோம். அதற்காக பொய்யான விடயங்களைக் கூறி மக்களை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம். - என்றார்.

# அர்ஜூன் மகேந்திரன் இன்றி வழக்கை முன்னெடுக்க கோரிய சட்ட மா அதிபர்



மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் கார்திய புஞ்சிஹேோ இல்லாமல் 2015 பிணைமுறி மோசடி வழக்கை முன்னெடுத்துச் செல்ல அனுமதி வழங்குமாறு கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றிடம் (ட்ரயல் அட்) சட்ட மா அதிபர் கோரியுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று (புதன்கிழமை) கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தக் கோரிக்கையை சட்ட மா அதிபர் முன்வைத்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கு 68.8 கோடி டொலர் இழப்பை ஏற்படுத்திய 2015 பெப்ரவரி மாதத்தில் 27 ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களாக குறித்த இருவரும் பெயரிடப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூரில் வசிக்கும் முதலாவது குற்றவாளியான அர்ஜுன மகேந்திரனை ஒப்படைக்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் இன்னும் சாதகமாகப் பதிலளிக்கவில்லை என நீதிமன்றத்தில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

அத்தோடு இந்த விவகாரத்தில் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய தேவையான நடவடிக்கைகள் குறித்து ஒரு பிரேரணை மூலம் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என்றும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அறிவித்தார்.

இதேவேளை சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல வேண்டும் என்ற இந்த வழக்கின் 8 ஆவது சந்தேக நபரான பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் ரஞ்சன் ஹுலுகல்லேவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகளை மக்களுக்கு உடன் வழங்குமாறு நாமல்உத்தரவு!

கல்முனை-மருதமுனை 65எம்வீட்டுத்திட்டத்தில் இது வரை பகிரப்படாத வீடுகளை விரைவாக பகிர்ந்தளிக்க விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்று( புதன்கிழமை) நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டு வீட்டுத்திட்டத்தைப் பார்வையிட்டமையுடன் உடனடியாக அவ்வீடுகளை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்குப் பணிப்புரை வழங்கினார்.



இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.வீரசிங்க,அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கா, அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் இணைப்பாளர் சட்டத்தரணி எம்.சிபான்,சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர், அமைப்பாளர்கள், பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்; 'இல்லத்து வழக்காடு' நூல் வெளியீடு!



(நூருல் ஹுதா உமர்)

ஆசியநிலையத்தின் அனுசரணையுடன் ஜி.ஏ.எஸ்.எஸ்.ஓ. நிறுவனத்தால் அமுல்படுத்தப்படும் பெண்களுக்கெதிரான வன்முறையை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஓர் அங்கமாக 'இல்லத்து வழக்காடு' எனும் தலைப்பில் வெளியீட்டாளரும், திட்டபணிப்பாளருமான ஏ.ஜெ. காமில் இம்டாட்டால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தக வெளியீடு காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டு வைத்தார். மேலும் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பாத்தீபன், கணக்காளர் ஜயசுமிகா, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க, காரைதீவு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிட்டா உட்பட மாதர் அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# 20 ஆம் திகதி மட்டுமே மதுபானசாலைகள் பூட்டு!

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபான நிலையங்களும், எதிர்வரும் 20 ஆம் திகதி மாத்திரமே மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள மதுபான நிலையங்கள் எதிர்வரும் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் மூடப்படும் என சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் மேற்படி செய்தி உண்மைக்கு புறம்பானது என இலங்கை காலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே போயா தினத்தை முன்னிட்டு மாத்திரமே எதிர்வரும் 20 ஆம் திகதி மதுபான நிலையங்கள் மூடப்படும் என அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# அரசாங்கத்துக்குள் நாம் எதிர்க்கட்சி!

## அமைச்சர் கம்மன்பில ஆதங்கம்



கெரவலபிட்டிய மின் நிலையத்தை அமெரிக்காவிற்கு கொடுத்ததன் மூலமாக சீனாவை நாம் பகைத்துக்கொள்ள நேர்ந்துள்ளது.

அதுமட்டுமல்லாது எரிவாயு ஆதிக்கம் அமெரிக்காவின் கைகளுக்கு சென்ற பின்னர் நாட்டின் தேசிய விவகாரங்களில் தலையிட்டு நாட்டை சமஷ்டியாக்கும் அழுத்தம் கொடுக்கப்படலாம் எனவும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறுகின்றார்.

அரசாங்கத்திற்குள் இருக்கும் எதிர்க்கட்சியாக நாம் செயற்பட்டுக்கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி நிலைமைகள் மற்றும் அரசாங்கத்திற்குள் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

எரிபொருள் எமது பிரதான இறக்குமதியாக உள்ள நிலையில் நாட்டின் ஏதேனும் பொருளாதார நெருக்கடிகள் இருக்கையில் முதலில் எரிபொருள் இறக்குமதியையே அது பாதிக்கும்.

ஆனால் நாம் அதற்கு இடம் வழங்காது எரிபொருள் இறக்குமதியை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த காலங்களில் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் இறக்குமதி செய்தோம், அடுத்த இரண்டு மாதங்கள் கடினமாக இருக்கும். எமக்கு கிடைக்கும் பணத்தில் எரிபொருள் இறக்குமதிக்கே அதிக செலவுகள் செல்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தை உருவாக்கும் வேளையில் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சி கண்டுள்ளது, நெருக்கடி நிலைமைகள் உள்ளன என்பதை நாம் கூறினோம், ஆனால் கொரோனா வைரஸ் தொற்று உருவாகும் என நாம் யாருமே எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே வீழ்ச்சி கண்டிருந்த பொருளாதாரம் கொரோனா வைரஸ் பரவலால் மேலும் நசுக்கப்பட்டுள்ளது.

வைரஸ் பரவல் எமது அரசாங்கத்தால் உருவாகவில்லை. எனினும் மக்கள் இன்று கஷ்டப்படுகின்றனர். ஆனால் இதில் யாரையும் குறை கூறிக்கொண்டு இருக்காது சகலரும் இணைந்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்க்காத பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. அரசாங்கம் பல தவறுகளை விடுத்துள்ளது. இவற்றை நாம் கடந்த வாரம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சுட்டிக்காட்டினோம். அரசாங்கத்தில் பங்காளிக்கட்சிகளாக நாம் எடுத்துக் கூறிய ஒரு சில முக்கிய விடயங்களை தீர்மானம் எடுக்கும் நபர்கள் செய்யவில்லை.

வாக்குறுதியளித்த விடயங்களை செய்யாதிருப்பதை விடவும், வாக்குறுதி வழங்காத விடயங்களை செய்கின்றமை அரசாங்கத்தின் தவறாகும். அதுமட்டுமல்ல நாம் ஆட்சிக்கு வந்துள்ள நிலையிலும் மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்வேன்.

அரசாங்கத்தில் முறையான பேச்சுகள் மூலமாக தீர்வுகள் எட்டப்படுவதில்லை. குறிப்பாக கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலைய விடயத்தில் எமது எதிர்ப்பைத் தொடர்ந்தும் நாம் முன்வைத்து வருகின்றோம். நள்ளிரவு 12 மணிக்கு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்னவென்பதை நாம் இன்னமும் பார்க்கவில்லை.

அதுமட்டுமல்ல கேள்விமனுக்கோரலுக்கு விடப்பட்ட ஓர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை கேள்விமனுக் கோரலுக்கு பங்குபற்றாத அமெரிக்காவுக்கு கொடுத்தமை பிழையான தீர்மானமாகும்.

ஏற்கனவே இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இதில் ஏற்கனவே உடன்பட்டிருந்தன. அவ்வாறான நிலையில் சீனாவுக்கே அதிகளவில் இந்த வேலைத்திட்டம் வழங்கப்பட அதிக வாய்ப்புகள் இருந்தன, கடந்த காலத்தில் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையைப் பாதுகாத்த சீனாவை நிராகரித்துவிட்டு எமக்கு எதிராக பிரேரணைகளைக் கொண்டுவந்து தண்டிக்க நினைத்த அமெரிக்காவிற்கே இதனை வழங்குவதன் மூலமாக சீனாவை நாம் பகைத்துக்கொள்ள நேரிடும். அதனையும் தாண்டி எரிவாயு ஆதிக்கத்தை அமெரிக்கா கையில் கொடுத்துவிட்டு, நாட்டை சமஷ்டியாக்காவிட்டால் எரிவாயு வழங்க மாட்டோம் என அமெரிக்கா கூறலாம்.

அவ்வாறான நிலையில் நாம் என்ன செய்வது, நாட்டை இருளில் தள்ளினால் என்ன செய்வது? அதுமட்டுமல்ல மன்னார் எரிவாயு திட்டத்தையும் அமெரிக்கா கைப்பற்றினால் இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாகப் பாதிக்கும். இவ்வாறான பல்வேறு காரணிகள் எம்மைச் சார்ந்துள்ளன.

இதனை அமைச்சரவையில் நான் எடுத்துக்கூறினேன். அமெரிக்காவின் அடிமையாக மாற்றும், பூகோள அரசியலில் குழப்பங்களை ஏற்படுத்தும் தீர்மானங்களை எடுக்கும் நபர்கள் அரசாங்கத்தில் இருக்கின்றனர். யார் தவறிழைத்தாலும் தவறு தவறு தான். எமது தலைவரா அல்லது எதிர்க்கட்சித் தலைவரா என்பது முக்கியமல்ல. ஆகவே இப்போது நடக்கும் தவறுகளை சுட்டிக்காட்டி அரசாங்கத்திற்குள் இருக்கும் எதிர்க்கட்சியாக நாம் செயற்பட்டுக்கொண்டுள்ளோம். – என்றார்.

## பாணந்துறையில் நாய்களை கடத்தி கொன்று தின்ற தம்பதியினர் கைது!

பாணந்துறை – வாத்துவ பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவமாக நாய்களை கடத்தி கொன்று தின்றனர் எனக் கூறப்படும் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான வகையில் ஆறு நாய்களைக் கொண்டு சென்ற தம்பதியினர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்பதியினர் தெருநாய்களை பிடித்து, கொன்று இறைச்சியாக்கினர் என அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பாகப் பொலிஸ் அவசர பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

42 வயதான ஆண் ஒருவரும் 38 வயதான பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்கள் கொழும்பு 2 பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் இருவரும் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தம்பதியினர் தொடர்பாக உளவியல் பரிசோதனை நடத்துவதற்கு பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பல்கலை கல்வி நடவடிக்கை படிப்படியாக ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, ஒக். 14

கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொண்டதன் மூலம் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களைத் திறந்து மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படும் என கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்திரிகா விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

20 முதல் 30 வயதிற்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

பல்கலைக்கழக மாணவர்களில் 11 வீதமானவர்கள் இதுவரை தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொவிட் தடுப்பு மருந்தின் இரண்டாவது டோஸ் இன்று வழங்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் சினோபோர்ம் தடுப்பூசியை பெற்றுள்ளனர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அருகில் உள்ள பல்கலைக்கழகங்களுக்குச் சென்று, மாணவர்கள் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். – என்றார்.

## தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறல்கள் குறித்து உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுபடுத்தினார் சாணக்கியன்!

இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சந்தித்து பேசியுள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்கிழமை நண்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தை எதிர்காலத்தில் முன்னேற்றும் செயல்பாடுகளில் முதன்மையான தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் இயற்கை அழகுடன் காணப்படும் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் பல திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன், மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் காணி அபகரித்தல் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டமையுடன், இதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஆவணமும் கையளிக்கப்பட்டது.

இதன்போது சாணக்கியன் விசேட கோரிக்கை ஒன்றையும் முன்மொழிந்திருந்தார்.

குறிப்பாக தொல்பொருள் எனும் பெயரில் காணிகள் சூறையாடப்படுகின்றமையை தடுக்கும் நோக்குடன் தொல்பொருள் சம்பந்தமான செயற்பாடுகள் அனைத்தும் யுனெஸ்கோ அமைப்பின் ஊடாக சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.



இதன்மூலம் நாம் எதிர்கொள்ளும் சட்ட விரோத காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளைத் தடுக்க முடியும் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சந்திப்பு சமகால அரசியல் பரிமாற்றத்துடன் முற்றுப்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழ் அரசு பச்சிலைப்பள்ளி கிளை நிர்வாகிகளை சந்தித்தார் சிறிதரன்

தமிழ் அரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளி கிளையின் நிர்வாகிகள் சந்திப்பு, கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் பளை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி கிளையின் நிர்வாக உறுப்பினர்களுடன் தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் பச்சிலைப்பள்ளி வட்டாரங்களின் நிலைமைகள் தொடர்பாகவும், 2022 ஆம் ஆண்டு புதியவர்களை கட்சிக்குள் உள்வாங்குவது தொடர்பாகவும், கட்சி கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பாகவும் நிர்வாக உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் மற்ற தொகுதிகளான கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகியவற்றின் கிளை நிர்வாக உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.



# சட்டவிரோதமான மண் அகழ்வு பச்சிலைப்பள்ளி மக்கள் விசனம்

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட முகமாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அண்மைய நாள்களாக முகமாலை வடக்குப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

வாய்க்கால்களில் மண் ஏற்றப்பட்டு தூரிசும் உடைத்தெறியப்பட்டு மண் ஏற்றப்பட்டு வருகின்றது.

இதனால் வெள்ள நீர் வழிந்து ஓட முடியாது காணப்படுவதுடன், கிராமங்களில் வெள்ளப் பாதிப்பும் ஏற்பட வாய்ப்புள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

இதேவேளை மேற்படி பகுதியைக் கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் பார்வையிட்டுள்ளனர்.

# நோர்வே, நெதர்லாந்து உயர்ஸ்தானிகர்கள் கிழக்கு ஆளுநர் அநுராதாவை சந்தித்தனர்

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத்துக்கும், இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் ஸ்ரீ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (புதன்கிழமை) திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் சேதனப் பசளையை ஊக்குவிக்கும் விடயத்தில் அனைத்து நாடுகளும் கிழக்கு மாகாணத்தை அவதானித்துக் கொண்டிருக்கின்றன எனவும், கிழக்கின் விவசாயத்தை ஊக்கு விக்கும் விடயத்தில் மிகவும் கரிசனையாக இருப்பதா கவும் நெதர்லாந்து உயரிஸ்தானிகர் குறிப்பிட்டார் என ஆளுநர் தெரிவித்தார்.

நெதர்லாந்து சிறிய நாடாக இருந்தாலும் சேதனப் பசளை தயாரிக்கும் விடயத்தில் சர்வதேச மட்டத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத் இதன்போது தெரிவித்தார்.

மேலும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக கல்வி விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி. வணிகசேகர மற்றும் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு அடுத்த வருடம் முகங்கொடுப்பர்!

## ஐ.தே.க. ஆரூடம்




அரசாங்கத்துக்கு முறையானவேலைத் திட்டம் இல்லாத காரணத்தாலேயே நாடு பாரிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கான இரசாயன உரம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தடை காரணமாக விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு எந்தத் தீர்வையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை என வஜிர அபேவர்த்தன குற்றம் சாட்டினார்.

நாட்டைக் கொண்டு நடத்துவதற்கு அரசாங்கத்திடம் தூரநோக்கு சிந்தனையோ முறையான வேலைத்திட்டமோ இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே அடுத்த வருட நடுப்பகுதியில் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் மக்கள் அவதிப்படும் நிலை ஏற்படும் என்றும் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன குறிப்பிட்டார்.

# தற்போதைய கட்டுப்பாடுகள் 31 வரை நீடிக்கப்படலாம்!

முடக்கக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு பின்னர் நீக்கப்படவிருந்த சில கட்டுப்பாடுகள் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நீடிக்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒக்ரோபர் முதலாம் வாரம் முதல் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பின்னர் ஒக்ரோபர் மாதத்தில் பின்பற்ற வேண்டிய இரண்டு கட்டங்களின் கீழான புதிய வழிகாட்டுதல்கள் செப்ரெம்பர் 30 ஆம் திகதி சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டது.

முதல் கட்டத்தின் கீழ் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 15 வரையும் இரண்டாவது கட்டத்தின் கீழ் ஒக்ரோபர் 16 முதல் 31 வரையும் மக்களின் நடத்தைக்கு ஏற்ப கட்டுப்பாடுகளை நீக்க அல்லது நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஒக்ரோபர் 16 முதல் நடைமுறைக்கு வரும் கட்டுப்பாடுகள், பொது இடங்களில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் ஒப்பிடும்போது திருமணங்கள், இறுதிச் சடங்குகள் மற்றும் உணவகங்கள், கடைகள், உடற்பயிற்சி நிலையங்கள் போன்றவற்றுக்கு ஓரளவு தளர்வு அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், ஊரடங்கு உத்தரவை தளர்த்திய பின்னர் மக்களின் பொறுப்பற்ற நடத்தையை கருத்தில் கொண்டு, சுகாதார அதிகாரிகள் நிலைமையை ஆராய்ந்து சில கட்டுப்பாடுகளை எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நீடிக்க தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மக்கள் சுகாதார விதிகளை புறக்கணித்து நடந்தால் அது மற்றொரு அலையை ஏற்படுத்தும் என்றும் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசு தோல்வியுற்றதாக கோட்டா கூறவில்லை!

## டலஸ் இப்படிக் கருத்து

அரசாங்கம் தோல்வியடைந்ததாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை என அமைச்சரவை பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த 69 லட்சம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்பதையே ஜனாதிபதி தெரிவித்தார் என அமைச்சர் கூறினார். நல்லாட்சி அரசாங்கத்தால் முற்றிலுமாக அழிக்கப்பட்ட ஒரு பொருளாதாரத்தை இந்த அரசாங்கமே மீட்டெடுத்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் அடைந்த அனைத்து சாதனைகளும் 2015 இற்குப் பின்னர் தலைகீழாக மாறியது என்றும் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

# இந்திய மீன்பிடிப் படகுகளால் பெறுமதிமிக்க வலைகள் முல்லைத்தீவு கடற்பரப்பிலும் அழிக்கப்பட்டுள்ளன!

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பு முல்லைத்தீவு கடற்பரப்பிலும் வியாபித்துள்ளது குறிப்பாக கடந்த சில நாள்களாக இந்தியாவிலிருந்து வருகை தரும் மீன்பிடி ட்ரோலர் படகுகள் உள்ளூர் மீனவர்களின் வலைகளை சேதப்படுத்திய சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது பெறுமதிமிக்க வலைகளை இந்திய இழுவைப் படகுகள் அழித்து துண்டாடி வருகின்றன எனவும் இந்த மீனவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்தக் காலங்களில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளிடம் இது தொடர்பாக முறையிட்டும் இதுவரையில் பலன் கிடைக்கவில்லை என மீனவர்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் தாமே நேரடியாக கடலுக்குச் சென்று அவர்களை கட்டுப்படுத்த வேண்டி நேரிடும் என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களுடைய பெறுமதியான பல வலைகள் அழிக்கப்பட்டு சிதைக்கப்பட்டு இருந்ததையும் இந்த மீனவர்கள் ஊடகவியலாளர்களுக்குக் காண்பித்தனர்.



# கிளிநொச்சி கடற்றொழிலாளர்களுக்கு ஐஸ் பெட்டிகளை வழங்கினார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஒக். 14

கடலில் பிடிக்கப்படுகின்ற கடலுணவுகளை பழுதடையாமல் பாதுகாப்பதற்கான ஐஸ் பெட்டிகள் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. பூநகரி, நாச்சிக்குடா, கண்டாவளை மற்றும் பளை ஆகிய பிரதேசங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அறுவடைக்குப் பின்னர் பழுதடைகின்ற கடலுணுவுகளின் வீதத்தைக் குறைக்கும் வகையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக சிறிய படகுகள் மூலம் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற சிறுதொழிலாளர்களுக்கு ஐஸ் பெட்டிகளை வழங்கி வைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு கடற்றொழிலாளர்களுக்கான மீன் பெட்டிகளை கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரின் ஒருங்கிணைப்பாளர் வை. தவநாதன், கடற்றொழில் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி மோகனகுமார் மற்றும் பிரதேச கடற்றொழில் உத்தியோகத்தர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

குறித்த ஐஸ் பெட்டி ஒன்றின் மூலம் கடலில் பிடிக்கப்படுகின்ற சுமார் 100 கிலோ மீன்களை பல மணி நேரங்கள் பழுதடையாமல் பாதுகாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காணப்பட்ட கொரோனாத்தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 28 ஆயிரத்து 414 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 438 பேர் குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 238 ஆக அதிகரித்துள்ளது.

## பச்சை வலயத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தொற்றுப் பரவலைக் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தும் நாடுகள் பச்சை வலயத்தில் சேர்க்கப்படும்.

எனினும், நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் நாடு மீண்டும் சிவப்பு வலயத்துக்கு நுழையும் அபாயம் உள்ளது. எனவே, நாட்டை பச்சை வலயத்தில் தொடர்ந்தும் பேணுவது மக்களின் கடமையாகும்.

நாட்டில் பதிவாகும் நாளாந்தக் கொரோனா உயிரிழப்பு மற்றும் தொற்று எண்ணிக்கையின் அடிப்படையில் சுகாதார ஸ்தாபனம் உட்பட பல சர்வதேச அமைப்புகள் இலங்கையை மீண்டும் பச்சை வலயத்துக்குள் அனுமதித்துள்ளன – என்றார்.

## வடக்கு வன்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்தார் என்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர், அதிவணக்கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரை நேற்று மாலை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் அதிவண, கலாநிதி, ஜஸ்டின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டனை இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பொலிஸ்மா அதிபர், மூத்த பொலிஸ் அத்தியட்சகராக, பிரதிப் பொலிஸ்மா அதிபராக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றி இருந்த ஒருவர். அவருக்கு யாழ்ப்பாணம் நன்றாகத் தெரியும். யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மீது நல்ல விருப்பம் கொண்டவர்.

இங்கே உள்ள பிரச்சினை தொடர்பில் நேரில் ஆராய யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வந்து என்னையும் சந்தித்துள்ளார்.

பொலிஸார் பொதுமக்களுடன் கூடுதலாக பழகவேண்டும். மக்களுக்கு சேவை செய்வதற்குதான் பொலிஸார். இராணுவத்தால் அது முடியாது. எனவே பொலிஸார் மக்களுடன் நல்ல உறவினைப் பேண வேண்டும்.

அது மாத்திரமல்லாமல் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்களுக்கு தண்டப்பணம் விதிப்பதை விடுத்து அவர்களை ஒரு மணிநேரமாவது தடுத்து நிறுத்தி அவர்களுக்கு விளக்கம் அளிப்பதன் மூலம்தான் எமது மக்களுக்கு அதன் அர்த்தம் புரியும். இதனைச் செயற்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்று பொலிஸ்மா அதிபருக்குச் சுட்டிக்காட்டினேன்.

இளையோர்கள் வேலைவாய்ப்பின்மை காரணமாகவே வடக்கில் வாள்வெட்டு சம்பவங்கள், வன்முறை சம்பவங்கள், திருட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகின்றன.

தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எமக்கு கடமைக்கு தேவையாக உள்ளது. ஏற்கனவே 500 பேர் மாத்திரமே கடமையாற்றிவருகிறார்கள்.

மேலதிகமாக தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நமக்கு தேவையாக உள்ளார்கள். அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வடக்கு மாகாணத்தில் பயிற்றுவிக்கப்படும்.

ஏனெனில் வடக்கில் இருந்து வெளி மாவட்டங்களில் சென்று பயிற்சி பெறுவதற்கு பலர் விரும்பவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

வடக்கிலிருந்து பொலிஸ் சேவையில் இணைய விண்ணப்பிப்போருக்கு இங்கேயே பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு மொழிப் பயிற்சியும் வழங்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் கூறியிருந்தார் – என்றார்.

## கரன்னாகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆக்கப்பட்ட சம்பவத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவும் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தை வலுவிழக்கச் செய்யக் கோரி, வசந்த கரன்னாகொட ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி அவன்தி பெரேரா குற்றப் பத்திரத்தை நீக்கிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

## ஆள முடியாவிடின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆள வேண்டியவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்,

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி தலைமையிலான அரசுக்கு அறிவுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் இன்று பொருள்களின் விலை விண்ணைத்தொட்டுள்ளது. தேநீராக இருக்கலாம், பனிஸாக இருக்கலாம், சோற்றுப் பார்சலாக இருக்கலாம் சாதாரண மக்களுக்குரிய அனைத்துப் பொருள்களுமே அதிகரித்து வருகின்றது. வரவு – செலவுத்திட்டம் மூலமாக சரியான தீர்வை இந்த அரசு முன்வைக்கும் என்கின்றனர். நம்பவே முடியாது.

நாட்டை நிர்வகிக்க முடியவில்லை என்றால், பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், ஆளமுடியவில்லை என்றால் போய் விடுங்கள். சரியானவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் – என்றார்.

## போராட்டத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் முக்கியத்துவமிக்க கலந்துரையாடல் நடைபெற்றது.

எனினும், இதன்போது இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அரசால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் கலந்துரையாடிவிட்டு முடிவை அறிவிப்பதாக தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்தன.

இதன்பிரகாரம் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் கூடி ஆராய்ந்தனர். இந்தக் கூட்டத்திலேயே போராட்டத்தைத் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுப்ரமணியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெற்றது.

பல அமைச்சுப் பொறுப்புக்களை வகித்திருக்கும் சுப்ரமணியம் சுவாமி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான நட்புறவுக்காக முன்னிலை வகித்திருப்பதோடு, இலங்கையில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகளைத் தோற்கடிப்பதற்கான இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியவராவார்.

பொருளாதார நிபுணரும் புள்ளியியல் வல்லுநருமான சுப்ரமணியம் சுவாமி, பாதுகாப்புச் செயலாளராக ஜனாதிபதி அவர்கள் பதவி வகித்த காலப்பகுதியில் நடத்தப்பட்ட மாநாடுகளின்போது, விரிவுரையாளராகவும் கலந்துகொண்டிருந்தார்.

சுப்ரமணியம் சுவாமி இம்முறை இலங்கை விஜயத்தின் போதும் சந்திக்கக் கிடைத்தமையிட்டு, ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார்.

# இந்திய இராணுவத் தளபதி கோட்டாவுடன் நேரில் பேச்சு



இந்திய இராணுவத்தின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நாராவண அவர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் அயல் நாடுகளின் ஸ்திரத்தன்மையை, தமது நாடு அதிகளவில் எதிர்பார்க்கின்றது என்று தெரிவித்தவாறு ஜெனரல் தனது கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

தான் இராணுவச் சேவையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில், இந்தியாவில் பெற்ற இராணுவப் பயிற்சிகள் மற்றும் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட ஜனாதிபதி, இந்திய இராணுவப் பயிற்சிகளின் மூலம் நம் நாட்டு இராணுவ அதிகாரிகளுக்குக் கிடைக்கும் தலைமைத்துவப் பண்புகள் குறித்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

பல தேச எல்லைகளால் சூழ்ந்துள்ள இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மலைசார்ந்த கடினமான பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கான நலத்திட்டங்கள் மற்றும் தலைமைப் பயிற்சி பெறும் அதிகாரிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் பரிந்துரைக்கும் தரநிலைகள் போன்ற விடயங்களை, ஜெனரல் மனோஜ் முகுந்திடம் ஜனாதிபதி கேட்டுத் தெரிந்துகொண்டார்.

படைப் பிரிவொன்றின் தளபதியாக நியமனம் பெற்ற பின்னரே, தலைமைத்துவப் பயிற்சிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் அனுப்பப்படுவர் என்று தெரிவித்த ஜெனரல், அந்தந்தத் தரநிலையினர் ஓய்வுபெறும் வயதெல்லைகள் குறித்தும் விவரித்தார்.


இலங்கை இராணுவ அதிகாரிகளில் சுமார் ஆயிரம் பேர், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கமைய, மேற்படி இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மேலும் 50 இராணுவ அதிகாரிகளுக்கு, எதிர் காலத்தில் விசேட பயிற்சிப் பாடநெறிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, திருகோணமலை – 4ஆம் மைல்கல் பிரதேசத்தில் தான் பணியாற்றிய காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் நினைவுகள், தற்போதைய இந்த விஜயத்தின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்றும் ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில், அந்த நினைவுகள் பற்றிக் கலந்துரையாடக் கிடைத்தமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.

இந்திய இராணுவத் தலைமையகத்தின் பயிற்சிகளுக்கான கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரஜீவ் தாபர், இராணுவ ஆலோசகர் விக்ராந்த் விளாஸ் நாயக், வெளிவிவகாரப் பிரிவின் உறுப்பினர் கேர்ணல் மந்தீப் சிங் தில்லன், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

# வல்லிபுரம், செல்வச்சந்நிதி ஆலயங்களுக்குள் சப்பாத்துக்களுடன் சென்ற பொலிஸ் அதிகாரி



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

இந்து மத நியதிகளை மதிக் காமல் வரலாற்றுச்சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்ற பொலிஸ் அதிகாரி தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கொட்டாச்சி என்பவரே இவ்வாறு மத நியதிகளை மீறி ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று நண்பகல் வருகை தந்துள்ள பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ர மரத்ன வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் ஆலய வெளி வீதியில் சப்பாத்துக்களைக் கழற்றிவிட்டு ஆலயங்களுக்குள் சென்று வழிபாடுகளை முன்னெடுத்த நிலையில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சப்பாத்துக்களை கழற்றாது ஆலயங்களுக்குள் சென்றுள்ளார்.

## மேலும் 31 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்தவர்களில் 30 வயதுக்குட்பட்ட எவரும் உயிரிழக்கவில்லை. 30 முதல் 59 வயதுக்கிடைப்பட்ட 4 ஆண்களும், 4 பெண்களும், 60 வயதுக்கு மேற்பட்ட 16 ஆண்களும், 7 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 408 ஆக அதிகரித்துள்ளது.

## கைது படலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பருத்தித்துறை கடற்பரப்புக்குள் உள்நுழைந்த வேளை கைதுசெய்யப்பட்ட குறித்த மீனவர்கள், இன்று கொரோனா பரிசோதனையின் பின்னர் காரைநகரில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டு 14 நாள்களின் பின்பே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்திய மீனவர்களின் தொடர் அத்துமீறலைக் கண்டித்து எதிர்வரும் 17ஆம் திகதி கடலில் இறங்கிப் போராட்டம் நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ள நிலையில், இந்திய மீனவர் கைது படலம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## விவசாயிகள், மீனவர்கள் பிரச்சினைகளுக்கு

# நீதி கோரி தமிழர் தாயகத்தில் 17,18 இல் பெரும் போராட்டம்!

### அரசுக்கு எதிராக அணிதிரளுமாறு சுமந்திரன் எம்.பி. அழைப்பு

**(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**



**தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் போராட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் உரத்தைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். குறிப்பாக தென் பகுதியிலும் இந்தப் பிரச்சினையால் விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளார்கள். குறிப்பாக தென் பகுதியில் அரசுக்கு எதிராக பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விவசாய அமைச்சரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் உள்ள கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக மக்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்வது நல்ல விடயம் அல்ல. அது சமூகப் பொறுப்புக்கும் மாறானது என்பதைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கும் முன்னால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் மாத்திரம் ஒரே நேரத்தில் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் .

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 28 கமநல சேவை நிலையங்கள் இருக்கின்றன. அனைத்து நிலையங்களுக்கு முன்னாலும் எதிர்வரும் திங்கட்கிழமை 18ஆம் திகதி காலை 9 மணிக்கு சமூகப் பொறுப்போடு சமூக இடைவெளியைப் பின்பற்றி தற்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த அரசுக்கு எதிரான போராட்டத்தில் அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தைச் செய்யவுள்ளோம்.

தெற்கில் உள்ள ஏனைய எதிரணி அரசியல் தலைவர்களுடன் பேசியுள்ளோம். அவர்களும் தங்களுடைய பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்சினை காணப்படுகின்றது எனவும், தொடர்ச்சியாக தமது பகுதியில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். அதாவது எமக்கு பசளை கிடைக்கும் வரை இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல் வடக்கு மீனவர்கள் அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

குறித்த இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துவதற்கு ஏற்கனவே சட்ட மூலம் இயற்றப்பட்டுள்ள நிலையில், அதனை அரசு நடைமுறைப்படுத்தத் தயங்குகின்றது. குறிப்பாக கடற்தொழில் அமைச்சராக ஒரு தமிழர் இருந்தும், அவர் அதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் இலகுவான விடயம்.

ஆனால், அவர் அதனைச் செயற்படுத்தாததன் காரணமாக இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை வடக்கு பகுதியில் மீனவர்களைப் பெரிதாகப் பாதிக்கின்றது. எனவே, குறித்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 17ஆம் திகதி முல்லைத்தீவு கடலில் இருந்து பருத்தித்துறைக்குக் கடல் வழியாக வந்து அமைச்சருக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம். அனைத்துப் போராட்டங்களுக்கும் எமது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார்.

## கோட்டாபய துரோகி!

# நாம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு மரணச்சான்றிதழை எவ்வாறு வழங்குவீர் என்று உறவுகள் கேள்விக்கணை




**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் 1,700 ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கவ னவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா, ஏ - 9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டக் கொட்டகை முன்பாக நேற்று காலை குறித்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும், காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படங்களையும் தாங்கியிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரி விக்கையில்,

1,700 ஆவது நாளாக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். எங்களது பிள்ளைகளுக்கு எந்தவொரு தீர்வும் எட்டப்படவில்லை. ஜனாதிபதி மரணச் சான்றிதழ் வழங்குவதாகக் கூறியுள்ளார். எந்தவொரு தாயும் மரணச் சான்றிதழ் வாங்குவதற்குத் தயாராக இல்லை. அதை ஜனாதிபதி சொன்ன நாளில் இருந்து தாய்மார் தேம்பித் தேம்பி அழுகின்றார்கள். ஜனாதிபதி அமெரிக்கா சென்று தனது பேரப்பிள்ளையைத் தூக்கி மழலை பொழிகின்றார்.

நாங்கள் எமது பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு போராடிக் கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதிக்கு இருக்கின்ற பாசம் தானே எங்களுக்கும் எங்கள் பிள்ளைகள் மேல் இருக்கும். அம்மா என்று சத்தம் கேட்கும்போது எமது வயிறு கொதிக்கின்றது. கண்கண்ட சாட்சியங்கள் இருக்கின்றன. கோட்டாபய துரோகி. இராணுவத்தினரிடம் நாம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழை எவ்வாறு வழங்க முடியும்? - என்றார். (100)



# யாழில் பொலிஸ்மா அதிபர் இரு ஆலயங்களில் வழிபாடு

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மாகாணத்தில் சட்டம் - ஒழுங்கு தொடர்பில் நேரில் ஆராயும் வகையில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன இன்று கிளிநொச்சியில் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ள நிலையில் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம், தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் ஆகியவற்றில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இன்றைய கூட்டத்துக்காகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைமைகள், பொலிஸ் துறையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன இன்று ஆராயவுள்ளார்.